# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 4: கலகம்செய்த இளவரசன்

2சாமுவேல் 13:1-18,33

### நடந்த கதை . . .

தாவீதின் குமாரர்களில் அப்சலோம் மிகவும் அழகானவன்; ஆனால், தந்திரமுள்ளவன்; பேராசைக்காரன். 'இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப் போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது.' 2 சாமு 14:25.

அந்த வாலிப இளவரசன் தன் அழகால் மக்களைக் கவர்ந்தது மட்டுமல்ல, தன் தகப்பனுடைய சிங்காசனத்தை அபகரிக்கவும் விரும்பினான். இஸ்ரவேலின் ராஜாவாகிவிட நினைத்தான்.



அப்சலோம் முதலாவது தன் மூத்த சகோதரனாகிய அம்னோனைக் கொன்றான். ஏனென்றால், அப்சலோமின் சகோதரியாகிய தாமாரை அம்னோன் அசிங்கப்படுத்தியிருந்தான். தாவீதுக்கு முதல் பிறந்தவன் அம்னோன்; அடுத்து ராஜாவாகும் உரிமையைப் பெற்றிருந்தவன். அப்சலோம் நயவஞ்சகமாக தன் தகப்பனுடைய ஆதரவைப் பெற்றபிறகு, தாவீதின் அரசாட்சி, நீதி, சட்டங்கள்பற்றி ராஜ்யம் முழுவதிலும் சந்தேக விதைகளை ரகசியமாகத் தூவினான்; இறுதியில், "இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான்". 2சாமு 15:6.

ஒரு சிறிய கலக விதையானது இப்போது ஒரு பெரிய கலகமாக வளர்ந்து வெளிப்பட்டது; தன் சொந்தத் தகப்பனையே கொன்று, ராஜ்யத்தைக் கைப்பற்ற நினைத்தான். தாவீதும் அவருடைய ஆதரவாளர்களும் எருசலேமை விட்டே ஓடவேண்டியதாயிற்று. சில நாட்களுக்குப் பிறகு நடைபெற்ற கடுமையான யுத்தத்தில், தாவீது மீண்டும் தன் சிங்காசனத்தைப் பெற்றுக்கொண்டார்; அழகு இளவரசனான அப்சலோம் கொல்லப்பட்டான்.

வருத்தகரமான ஒரு சம்பவம்தான். அரசகுடும்பத்தில் இப்படி நடப்பது இது முதல் முறையல்ல. அநேக வருடங்களுக்குமுன் பெரிய சாம்ராஜ்யம் ஒன்றில், கலகங்களிலேயே மிகக்கொடிய கலகம் ஒன்று, வருத்தகரமான விளைவை உண்டுபண்ணியது.

அந்த சாம்ராஜ்யத்தின் பெயர் பரலோகம்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. பரலோகத்தில் கலகம்செய்தவன் பெயர் என்ன? அவன் ஏன் கலகம் செய்தான்?**

**ஏசாயா 14:12.** *அதிகாலையின் மகனாகிய ______________________, நீ வானத்திலிருந்து விழுந்தாயே!* (விடிவெள்ளி என்பதற்கான இலத்தீன் சொல் லூசிபர்.)

**ஏசாயா 14:14.** *நான் ... உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் ______________________ சொன்னாயே.*

**எசேக்கியேல் 28:17.** *உன் ______________________ உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் ______________________ உன் ஞானத்தைக் கெடுத்தாய்.*

**குறிப்பு:** தேவன் படைத்தவர்களில் லூசிபர் மிகவும் அழகுள்ளவன், அதிகாரமுள்ளவன். அவன் தூதர்களின் தலைவனாக இருந்தபடியால், பரலோகப் பாடற்குழுவிற்கு அவன்தான் தலைமை தாங்கியிருக்க வேண்டும். ஆனால் தன் அழகினிமித்தம் அவன் அகந்தைகொண்டான். ('சாத்தானுக்கு அடையாளமான தீருவின் ராஜாக்களும், பாபிலோனின் ராஜாக்களும்' எனும் சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியை வாசியுங்கள்).

**2. தேவன் முதலில் லூசிபரைச் சிருஷ்டித்தபோது, அவனை ஒரு பிசாசாகப் படைத்தாரா?**

**எசேக்கியேல் 28:15.** *நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் ______________________.*

**குறிப்பு:** பரிபூரணமாகச் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு தூதன், தன் தீர்மானத்தால் பிசாசாக மாறினான். நினைத்தாலே கஷ்டமாக இருக்கிறது. லூசிபர் விழுவதற்குமுன் அவனை நமக்குத் தெரிந்திருந்தால் அவனைப் பிடித்துப்போயிருக்கும். எத்தனை வருடங்கள் கழித்து லூசிபர் கலகஞ் செய்தான் என்று தெரியவில்லை. ஆனால், அவன் இருதயத்தில் கசப்பும் அகந்தையும் தோன்றும்முன் பல யுகங்கள் அவன் சந்தோஷமாக தேவனைச் சேவித்திருக்கவேண்டும். தம் சிருஷ்டிகளை இயந்திர மனிதர்கள்போல் தேவன் சிருஷ்டித்திருக்க முடியும். ஆனால், இயந்திர மனிதர்கள் அன்புகூர முடியாது. உண்மையான அன்பு அபாயங்களைத் துணிந்து ஏற்கும். அதனால்தான், பிள்ளைகள் சிலசமயங்களில் தங்களுக்குக் கீழ்ப்படியமாட்டார்கள் என்று தெரிந்தும் நாம் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்கிறோம். லூசிபர் தொடர்ந்து கலகம்செய்ய பல்வேறு காரணங்களுக்காக தேவன் அனுமதித்தார். முதலாவது, தெரிந்தெடுக்கும் சுதந்தரத்தோடு தேவன் தம் சிருஷ்டிகளைப் படைத்திருக்கிறாரா எனும் கேள்விக்கும் நிரந்தரமாக விடை கிடைக்கும். இரண்டாவது, தேவனுடைய அன்பு, அரசாட்சி பற்றி லூசிபர் சந்தேகங்களைப் பரப்பிவிட்டதுமே அவனை அழித்திருந்தால், மற்ற அறிவு ஜீவிகளின் மனதில் எழும் கேள்விகளுக்குப் பதில் கிடைத்திருக்காது. 'லூசிபர் சொன்னது சரிதானோ?' என்று அவர்கள் நினைத்திருக்கலாம். எனவே, பாவத்தின் மோசமான விளைவுகளை உண்டாக்க லூசிபருக்கு அனுமதியளிக்கப்பட்டது. இறுதியாக, தேவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர் தண்டிப்பார் என்று பயந்து தம் பிள்ளைகள் தமக்குக் கீழ்ப்படிவதை தேவன் விரும்ப வில்லை. பயத்தினால் அல்ல, அன்பின் நியதிகளால் நாம் அவருக்குப் பயப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

**3. இறுதியில் என்னவாயிற்று?**

**வெளிப்படுத்தல் 12:7.** ______________________ ______________________ *உண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; ______________________ அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வெளிப்படுத்தல் 12:7.*

**குறிப்பு:** கடைசியாக லூசிபரும் அவனோடு சேர்ந்த தூதர்களும் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டார்கள்.

**4. பிசாசின் கட்டளையின்கீழ் செயல்படும் சக்திவாய்ந்த ஜீவிகள் யார்?**

**வெளிப்படுத்தல் 12:4.** *அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் ______________________*

பங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று.

**வெளிப்படுத்தல் 12:9.** *பெரிய வலுசர்ப்பம் பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த ____________________ தள்ளப்பட்டார்கள்.*

**குறிப்பு:** சாத்தான் மிகவும் தந்திரமுள்ளவன். தேவனுக்கு எதிரான கலகத்தில், மூன்றில் ஒரு பங்கு பரலோகத் தூதர்களை அவன் வஞ்சித்து, தன்னோடு சேர்த்தான். 'பிசாசுகள்', 'பேய்கள்' என்று அழைக்கப்படும் இந்தத் தூதர்கள் சாத்தானின் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். அப்சலோம் சம்பவத்திலும், தன் அயோக்கிய வேலையில் அவன் அதிகமாக ஈடுபடவில்லை. தன்னுடைய ஆசைகளைத் தன் வேலைக்காரர்கள் மூலம் அவன் நிறைவேற்றிக்கொண்டான்.

**2சாமுவேல் 13:28.** *'அப்சலோம் தன் வேலைக்காரரை நோக்கி:அம்னோன் திராட்ச ரசம் குடித்துக் களித்திருக்கும் சமயத்தை நன்றாய்ப் பார்த்திருங்கள்; ... அவனைக் கொன்றுபோடுங்கள்; நான் அல்லவோ அதை உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்; திடன்கொண்டு தைரியமாயிருங்கள் என்று சொல்லியிருந்தான்.*

**2சாமுவேல் 14:30.** *'இதோ, என் நிலத்திற்கு அருகே யோவாபின் நிலம் இருக்கிறது ... நீங்கள் போய் அதைத் தீக்கொளுத்திப்போடுங்கள்' என்றான்.*

## 5. சாத்தான் என்னென்ன விதங்களில் செயல்படுகிறான்?

அ. **வெளிப்படுத்தல் 12:9.** *உலகமனைத்தையும் ____________________ பிசாசு.*

ஆ. **மாற்கு 1:13.** *அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாள் இருந்து, சாத்தானால் ____________________.*

இ. **வெளிப்படுத்தல் 16:14.** *அவைகள் ____________________ செய்கிற பிசாசுகளின் ஆவிகள்.*

ஈ. **வெளிப்படுத்தல் 12:10.** *இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் ____________________பொருட்டு அவர்கள் மேல் ____________________ தாழத் தள்ளப்பட்டுப் போனான்.*

உ. **யோவான் 8:44.** *அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ ____________________யிருக்கிறான் ... அவன் ________________ பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான்.*

**குறிப்பு:** நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான போராட்டத்தில், ஒரு விதத்தில் சாத்தானுக்கும் அதிக அனுகூலம் இருந்தது. தேவன் சத்தியத்தை மாத்திரமே பயன்படுத்துவார். சாத்தான் தன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உண்மையையும் பொய்யையும் பயன்படுத்துவான். (எதிர்பார்த்திராததை எதிர்பாருங்கள்' எனும் சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியை வாசியுங்கள்).

## 6. சாத்தான் எப்போது மிகவும் ஆபத்துள்ளவனாகிறான்?

**2கொரிந்தியர் 11:14,15.** *சாத்தானும் ஒளியின் ________________ ________________ தரித்துக்கொள்வானே.*

**குறிப்பு:** பிசாசைப்போல அப்சலோமும், மக்களை நேசிப்பதுபோல் நடித்தான்; அவர்களை வஞ்சிக்கும்படி அவர்களுடைய நலனில் தனக்கு அக்கறை இருப்பதுபோல் காட்டினான்.

**2 சாமுவேல் 15:5,6.** *எவனாகிலும் ஒருவன் அவனை வணங்க வரும்போது,அவன் தன் கையை நீட்டி அவனைத் தழுவி, முத்தஞ்செய்வான். இந்தப் பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான்.*

சபைக்குள் கிரியைசெய்யும் ஓர் ஆவிக்குரிய ஜீவியாக சாத்தான் தன்னைக் காட்டும்போது அவன் மிகவும் ஆபத்துள்ளவனாகிறான். ('மிகச்சிறந்த ஒரு தூதன்' எனும் சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியை வாசியுங்கள்.

## 7. சாத்தானுக்கு வேதாகமம் தெரியுமா?

**மத்தேயு 4:5,6.** *அப்பொழுது பிசாசு ... நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக் குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் ... என்பதாய் ____________________ என்று சொன்னான்.*

**குறிப்பு:** மக்களை வஞ்சிப்பதற்காக வேதவசனங்களைச் சரியாகக் கூறுவதிலும் திரித்துக் கூறுவதிலும் சாத்தான் நிபுணன். அதனால்தான் தேவ பிள்ளைகள் தாங்கள் வழிதவறாமல் இருப்பதற்கு வேதவாக்கியங்களை அறிந்திருக்கவேண்டியது அவசியம்.

### 8. பூமியில் சாத்தான் அதிகமாக யாரை வெறுக்கிறான்?

**வெளிப்படுத்தல் 12:17.** *அப்பொழுது வலுசர்ப்பமானது ______________________ கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான _____________________________ யுத்தம்பண்ணப் போயிற்று.*

### 9. சாத்தானைச் சித்தரிக்க வேதாகமம் பயன்படுத்தும் இரண்டு மோசமான மிருகங்கள் யாவை?

**1பேதுரு 5:8.** *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற ________________போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.*

**வெளிப்படுத்தல் 12:9.** *உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய ________________ பெரிய வலுசர்ப்பம் பூமியிலே விழத்தள்ளப்பட்டது.*

**குறிப்பு:** சிங்கங்களும் பாம்புகளும் தங்கள் இரைகளைப் பிடிப்பதற்காக மறைந்திருந்து, கவனத்தைத் திசைதிருப்பி தாக்கும். சாத்தானைப்போலவே அவை திடீரெனத் தங்கள் இரைமேல் பாய்ந்து, இரக்கமேயின்றி வேதனைப்படுத்திக் கொன்றுவிடும்.

### 10. சாத்தானை எதிர்ப்பதற்கான ஒரே வழி என்ன?

**யாக்கோபு 4:7,8.** *தேவனுக்குக் ___________________________; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் _______________, அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.*

**குறிப்பு:** தேவனைக் கிட்டிச்சேருவதற்கான சிறந்த வழி ஜெபமும், அவருடைய வார்த்தையின் மூலம் அவரை அறிந்துகொள்ள நாடுவதும்தான்.

### 11. சாத்தானின் கடுஞ்சோதனைகளை இயேசு எவ்வாறு சந்தித்தார்?

**மத்தேயு 4:10.** *அப்பொழுது இயேசு, அப்பாலே போ சாத்தானே ... என்று ____________________________ என்றார்.*

**எபேசியர் 6:17.** *____________________________ ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

**எபிரெயர் 4:12.** *தேவனுடைய ________________________ ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ... இருக்கிறது*

**குறிப்பு:** நாம் பாவம் செய்யாதபடி தேவ வார்த்தையை நம் மனதிற்குள் வைத்திருப்பதுதான் சாத்தானின் புத்திசாலித்தனமான வஞ்சகங்களிலிருந்து நாம் தப்பித்துக்கொள்வதற்கான ஒரே வழி. எந்தக் கருவிகளைப் பயன்படுத்தி சாத்தானை இயேசு எதிர்த்து நின்றாரோ, அதே கருவிகள் தாம் இன்று நமக்குத் தேவை; அவற்றை இன்றும் நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.

**சங்கீதம் 119:11.** *நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்துவைத்தேன்.*

**எபேசியர் 6:11.** *நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.*

**12. கடைசியில் அப்சலோமுக்கு ஏற்பட்ட நிலையே சாத்தானுக்கும் ஏற்படப் போகிறது. எவ்வாறு?**

**2 சாமுவேல் 18:17.** *அவர்கள் அப்சலோமை எடுத்து, அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய ________________ போட்டார்கள்.*

**ஏசாயா 14:15.** *ஆனாலும் நீ அகாதமான ________________ தள்ளுண்டு போனாய்.*

**13. தேவமக்களைச் சோதிக்க சாத்தான் மீண்டும் வரமுடியுமா?**

**எசேக்கியேல் 28:19.** *இனி ஒருபோதும் ________________________________.*

**நாகூம் 1:9.** *இடுக்கம் ____________________ உண்டாகாது.*

**14. துன்மார்க்கரின் அழிவு தேவனுக்கு எப்படிப்பட்டதாக இருக்கிறது?**

**எசேக்கியேல் 33:11.** *கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை ______________________, துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் _______________ ____________________ விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.*

**குறிப்பு:** துன்மார்க்கரை அழிப்பது தேவனுக்கு வேதனையான ஓர் அனுபவம். துன்மார்க்கரை அழிப்பதை தேவனுடைய ‘அபூர்வமான வேலை’ என்று வேதாகமம் கூறுகிறது; ஏனென்றால், அவருடைய அன்பின் சுபாவத்திற்கு அது புறம்பானது. ஏசாயா 28:21.

**15. தன் கலகக்கார மகன் இறந்ததை அறிந்ததும் தாவீதுக்கு எப்படி இருந்தது?**

**2 சாமுவேல் 18:33.** *அப்பொழுது ராஜா மிகவும் _______________, கெவுனி வாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய், அழுதான்; அவன் ஏறிப்போகையில், “என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே,*

*_________ ___________________________ ________________________________ நலமாயிருக்கும். அப்சலோமே என் மகனே” என்று சொல்லி அழுதான்.*

# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

தொலைந்துபோன தம் பிள்ளைகளை தேவன் தேவன் எப்படிப் பார்க்கிறாரென்பதை உருக்கமான இந்தச் சம்பவத்தில் காணமுடிகிறது. நமக்காக அவர் மரிக்க விரும்பியது மாத்திரமல்லாமல், இன்னுமொருபடி மேலே சென்று தம் மிகப்பெரிய ஈவாகிய தம் குமாரனையே கொடுத்தார். யார் மரிப்பதையும் தேவன் விரும்பதில்லை; நீங்கள் இரட்சிக்கப்படுவதை அவர் மிகவும் விரும்புகிறார். அதனால்தான் இயேசு உங்களுக்காக மரித்தார். பரலோகப் பிதாவுக்கு எதிரான கலகத்தில் உலகின் பெரும்பாலானோர் சாத்தானோடு சேர்ந்திருக்கிறார்கள். நீங்கள் தேவன்மேல் அன்புகூர்ந்து, அவரைச் சேவிக்க இப்போது தீர்மானிப்பீர்களா?

**பதில்:** ________________________________________________

# துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

**சாத்தானுக்கு அடையாளமான தீரு, பாபிலோனின் ராஜாக்கள்**

வேதாகமத்தில், ஏசாயா 14:4-15 இல் பாபிலோனின் ராஜாவும் எசேக்கியேல் 28:11-19 இல் தீருவின் ராஜாவும் சாத்தானுக்கு அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் விவரிக்கப்படுகிறவிதம் பூமியின் ராஜாக்களுக்குப் பொருந்தாதவை; அவர்களைப்பற்றி தேவன் சொல்லும் விஷயங்கள் அழியும் தன்மையுள்ள எந்த மனுஷனுக்கும் பொருந்தாதவை. வேதாகமத்திலுள்ள அந்த

வசனங்கள் எவ்விதத்தில் லூசிபரைச் (சாத்தான்) சித்தரிக்கின்றன என்பதைப் பாருங்கள்.

- வானத்திலிருந்து விழுந்தான். ஏசாயா 14:12.
- ஞானத்தில் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன். எசேக்கியேல் 28:12.
- ஏதேனில் இருந்தவன். வச 13.
- சகலவித விலையுயர்ந்த கற்களும் அவனை மூடியிருந்தன. வச 13.
- காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப். வச 14.
- தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் இருந்தான். வச 14.
- தன் வழிகளில் குறையற்றிருந்தான். வச 15.

தீரு மற்றும் பாபிலோனின் ராஜாக்கள் சாத்தானின் அதே திட்டங்களைச் செயல்படுத்தினார்கள்; இறுதியில் சாத்தானின் ராஜ்யம் முற்றிலும் அழியப்போவதைப்போல, அவர்களுடைய ராஜ்யங்களும் அழிந்தன. அதனால்தான் சாத்தானைச் சுட்டிக்காட்ட தேவன் அவர்களைப் பயன்படுத்துகிறார். அவர்கள் சாத்தானுக்கு அடையாளமாகத்தான் சொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை வேதாகம நிபுணர்கள் அனைவரும் ஒத்துக்கொள்கிறார்கள். லூசிபரைச் சுட்டிக்காட்டும் வேறு வசனங்களும் வேதாகமத்தில் உள்ளன. (லூக்கா 4:5,6; 10:18; யோவான் 8:44; 2 பேதுரு 2:4; 1 யோவான் 3:8; யூதா 6; வெளி 12:7-9). ஆனால், எசே 28 உம், ஏசாயா 14 உம் இல்லாவிட்டால், முழு வரலாறும் நமக்குக் கிடைத்திருக்காது.

## எதிர்பார்த்திராததை எதிர்பாருங்கள்

கடைசி நாட்களில் தேவனுடைய எதிரியாகவே சாத்தான் வெளிப்படுவான் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. தேவனுடைய கொடிய சத்துரு சாத்தான் என்பது உண்மைதான். ஆனால், நீதியின் வேஷத்தைத் தரித்துக்கொள்ள அவன் முயல்வான். மத்தேயு 24:24. பிரகாசமிக்க ஒரு தூதனாக அவன் தோன்றி (2 கொரி 11:;13-15), மக்களின் தொழுகையைப் பெற விரும்புவான். வெளி 13:12. அச்சு அசலாக ஒரு தெய்வம் போலவே அவன் காட்சியளிப்பதால், 'பூமியும் அதின் குடிகளும்' ஆச்சரியத்தில் மூழ்குவார்கள். வெளி 13:3. எத்தனை மோசமான வஞ்சனை! கிறிஸ்துவைப்போலவே சாத்தான் தோன்றுவதால், கிட்டத்தட்ட உலகம் முழுவதுமே அவனைப் பின்பற்றும்; தாங்கள் இயேசுவையே பின்பற்றுவதாக அவர்கள் நினைப்பார்கள். நீங்கள் வஞ்சிக்கப்படக் கூடுமா? இந்தப் பாடத்தொடரில் கொடுக்கப்பட்டுள்ள வேதாகம எச்சரிப்புகளுக்கு நீங்கள் செவிகொடுத்தால், வஞ்சிக்கப்படமாட்டீர்கள்.

## அழகில் சிறந்த ஒரு தூதன்:

'சிகப்பு நிறத்தில் வெளவால்போல் இறக்கையுள்ள, அருவருக்கத்தக்க ஒரு ஜந்து; பாதி மிருகமும் பாதி மனிதனுமாக இருப்பவன்; விரிந்த குளம்புகளும், ஒல்லியான, நீண்ட வாலும் உடையவன் அல்லது முட்கரண்டி போன்ற ஒரு கோலை ஏந்திக்கொண்டிருப்பவன்; நரக அக்கினியை மூட்டுபவன்' என்று மக்கள் தன்னைச் சித்தரிக்கும்போது சாத்தான் களிகூருகிறான். இத்தகைய பாவனைகள் கிரேக்கப் புராணக்கதைகளிலிருந்து வந்தவை. இத்தகைய முட்டாள்தனமான கருத்துகள் வேதாகமத்தில் இல்லை. சாத்தான் அழகான, கவர்ச்சியான ஒரு தூதன் என்றும், விசித்திரமான விதத்தில் அவனால் தொடர்புகொள்ள முடியும் என்றும் வேதாகமம் கூறுகிறது. வேதாகமத்தையும் அவன் நன்கு அறிவான். மத்தேயு 4:5,6. தன்னை தேவனுடைய சத்துரு என்று சொல்லுகிறான் சாத்தான்; தேவனுடைய குணத்தைத் திரித்துக்கூறுவதும் அவருடைய ராஜ்யத்தை அபகரிப்பதும்தான் அவன் நோக்கம். உங்களையும் உங்களுக்குப் பிரியமானவர்களையும் சாத்தான் வெறுக்கிறான்; உங்களை அழிக்கத் திட்டமிடுகிறான். அவன் திட்டங்களை அறியவும், அவற்றைத் தவிடுபொடியாக்கவும் இந்தப் பாடத் தொடர் உதவும். பராக்கிரமசாலியான உங்கள் இரட்சகரின் கரங்களில் நீங்கள் உங்களை ஒப்படையுங்கள்; அவருடைய வழிநடத்துதலுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள்.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com